# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர்:முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A., PGDJMC.,Ph.D. **DHINATH DHALAM** Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர்: முனைவர்: ஃபாரூக் அலி எம். B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 194 | சனிக்கிழமை Saturday | 10.10.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தலில் த.வெ.க. அபார வெற்றி

## சட்டசபையில் த.வெ.க. பலம் 109 ஆக அதிகரிப்பு

## பெரும்பான்மைக்கு இன்னும் 9 இடங்கள் தேவை



மதுராந்தகம் தொகுதியில் மரகதம் குமரவேலும், தாராபுரம் தொகுதியில் சத்யபாமாவும் வெற்றி பெற்றுள்ளனர். இரு தொகுதிகளிலும் தி.மு.க. வேட்பாளர்களை விட அதிக வாக்குகள் பெற்று த.வெ.க. வேட்பாளர்கள் அபார வெற்றி பெற்றுள்ளனர்.

27 வேட்பாளர்கள் போட்டியிட்ட மதுராந்தகம்

மதுராந்தகம் சட்டப்பேரவைத் தொகுதியில் த.வெ.க. சார்பில் மரகதம் குமரவேல், தி.மு.க. சார்பில் பரந்தாமன், அ.தி.மு.க. சார்பில் கணிதா சம்பத், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் சுகந்தி, நாம் தமிழர் கட்சி சார்பில் ஜானகிராமன் உள்ளிட்ட 27 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

இந்தத் தொகுதியில் மொத்தம் 2,13,788 வாக்காளர்கள் உள்ள நிலையில், 1,84,413 பேர் வாக்களித்தனர். இதன் மூலம் 86.26 சதவீத வாக்குகள் பதிவாகின. பதிவான வாக்குகள் 21 சுற்றுகளாக எண்ணப்பட்டன.

மதுராந்தகத்தில் 17,554 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி

வாக்கு எண்ணிக்கையின் முடிவில் த.வெ.க. வேட்பாளர் மரகதம் குமரவேல் 61,470 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட தி.மு.க. வேட்பாளர் பரந்தாமன் 43,916 வாக்குகள் பெற்றார். இதனால் மரகதம் குமரவேல் 17,554 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

அ.தி.மு.க. வேட்பாளர் கணிதா சம்பத் 38,770 வாக்குகள் பெற்றார். நாம் தமிழர் கட்சி 1,703 வாக்குகளையும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி 1,441 வாக்குகளையும் பெற்றன.

தாராபுரத்திலும் த.வெ.க. வேட்பாளர் வெற்றி

தாராபுரம் சட்டப்பேரவைத் தொகுதியில் த.வெ.க. சார்பில் சத்யபாமா, தி.மு.க. சார்பில் சுகன்யா, அ.தி.மு.க. சார்பில் பானுமதி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் லட்சுமணன், நாம் தமிழர் கட்சி சார்பில் கார்த்திகா உள்ளிட்ட 22 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

இந்தத் தொகுதியில் மொத்தம் 2,23,306 வாக்காளர்களில் 1,79,314 பேர் வாக்களித்தனர். இதன் மூலம் 80.30 சதவீத வாக்குகள் பதிவாகின. பதிவான வாக்குகள் 23 சுற்றுகளாக எண்ணப்பட்டன.

10,196 வாக்குகள் வித்தியாசத்தில் சத்யபாமா வெற்றி

தாராபுரம் தொகுதியில் த.வெ.க. வேட்பாளர் சத்யபாமா 62,596 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். தி.மு.க. வேட்பாளர் சுகன்யா 52,400 வாக்குகள் பெற்றார். இதன் மூலம் சத்யபாமா 10,196 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

அ.தி.மு.க. வேட்பாளர் பானுமதி 41,078 வாக்குகள் பெற்றார். நாம் தமிழர் கட்சி 4,954 வாக்குகளையும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 1,099 வாக்குகளையும் பெற்றன.

தொண்டர்கள் உற்சாகக் கொண்டாட்டம்

மதுராந்தகம், தாராபுரம் ஆகிய இரு தொகுதிகளிலும் த.வெ.க. வேட்பாளர்கள் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, அக்கட்சித் தொண்டர்கள் உற்சாகமாகக் கொண்டாடினர். இந்த இடைத்தேர்தல் வெற்றி குறித்து கருத்து தெரிவித்த அமைச்சர்கள், கடந்த 4 மாத கால ஆட்சிக்குக் கிடைத்த வெற்றி எனக் கூறி வருகின்றனர்.

தாராபுரம் தொகுதியில் பதிவான தபால் வாக்குகளில் திமுக, அதிமுக முதல் இரண்டு இடங்களைப் பிடித்துள்ளன

தாராபுரத்தில் மொத்தம் 1,406 தபால் வாக்குகள் பதிவான நிலையில் அதிகபட்சமாக திமுகவுக்கு 613 வாக்குகள் கிடைத்தன. அதிமுகவுக்கு 406, தவெகவுக்கு 255, நாம் தமிழர் கட்சிக்கு 19, கம்யூனிஸ்ட் கட்சிக்கு 7 தபால் வாக்குகள் கிடைத்தன.

மதுராந்தகம் தொகுதி 19-வது சுற்று முடிவுகள் - த.வெ.க. 19 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை

மதுராந்தகம் தொகுதி சட்டமன்ற இடைத்தேர்தல் (சுற்று 19)

மரகதம் குமாரவேல் - 67,819 (த.வெ.க.)

பரந்தாமன் - 48,516 (தி.மு.க.)

கனிதா சம்பத் - 43,233 (அ.தி.மு.க.)

ஜானகி ராமன் - 1,772 (நா.த.க.)

சுகந்தி - 1,370 (சி.பி.எம்.)

தாராபுரத்தில் 22 சுற்றுகள் நிறைவு - வெற்றியை உறுதி செய்தது த.வெ.க.

தாராபுரம் தொகுதி சட்டமன்ற இடைத்தேர்தல் (சுற்று 22)

சத்தியபாமா - 65,341 (த.வெ.க.)

சுகன்யா - 55,113 (தி.மு.க.)

பானுமதி - 43,594 (அ.தி.மு.க.)

கார்த்திகா - 4,973 (நா.த.க.)

லட்சுமணன் - 1,106 (சி.பி.ஐ.)

மதுராந்தகம் 17-வது, தாராபுரம் 21-வது சுற்று முடிவுகள் - வெற்றியை உறுதி செய்த த.வெ.க.

மதுராந்தகம் தொகுதி சட்டமன்ற இடைத்தேர்தல் (சுற்று 17)

மரகதம் குமாரவேல் - 61,343 (த.வெ.க.)

பரந்தாமன் - 43,651 (தி.மு.க.)

கனிதா சம்பத் - 38,428 (அ.தி.மு.க.)

ஜானகி ராமன் - 1,673 (நா.த.க.)

சுகந்தி - 1,305 (சி.பி.எம்.)

தாராபுரம் தொகுதி சட்டமன்ற இடைத்தேர்தல் (சுற்று 21)

சத்தியபாமா - 62,851 (த.வெ.க.)

சுகன்யா - 53,013 (தி.மு.க.)

பானுமதி - 41,484 (அ.தி.மு.க.)

கார்த்திகா - 4,973 (நா.த.க.)

லட்சுமணன் - 1,106 (சி.பி.ஐ.)

தமிழக தேர்தல் வரலாற்றில் இதுவரை நடைபெற்ற இடைத்தேர்தல்களில் பெரும்பாலும் ஆளுங்கட்சியே வாகை சூடியிருக்கிறது. ஆட்சிக்கு மக்கள் அளித்த நற்சான்றாக கருதி அந்த வெற்றியை ஆளுங்கட்சியினர் கொண்டாடினார்கள்.

அதுபோன்ற நிலையே தமிழகத்தில் நடைபெற்று முடிந்த மதுராந்தகம், தாராபுரம் தொகுதி இடைத்தேர்தலிலும் எதிரொலித்து இருக்கிறது. ஆனாலும், இந்த இடைத்தேர்தல் வெற்றி என்பது ஆளுங்கட்சியான த.வெ.க.வுக்கு மிகவும் தேவையான ஒன்றாக இருந்தது. காரணம், ஆட்சி அமைப்பதற்கான பெரும்பான்மை இன்னும் அக்கட்சிக்கு கிடைக்கவில்லை.

இப்படி, அ.தி.மு.க. கோட்டையாக இருந்த மதுராந்தகம், தாராபுரம் ஆகிய தொகுதிகள் இப்போது த.வெ.க. பேட்டையாக மாறிவிட்டது. தி.மு.க. 2-வது இடம் பிடித்த நிலையில், அ.தி.மு.க. 3-வது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது. நாம் தமிழர் கட்சியின் வாக்கு சதவீதம் பெரும் சரிவை சந்தித்து, 2 தொகுதிகளிலும் டெபாசிட் இழந்துள்ளது. இரு கம்யூனிஸ்ட் கட்சிகளும் டெபாசிட் இழந்த அதே நேரத்தில், 1,000 ஓட்டுகளை கடக்கவே பல சுற்றுகள் காத்திருக்க வேண்டியிருந்தது.

எது எப்படியோ, 2 தொகுதி இடைத்தேர்தலில் த.வெ.க. வெற்றிக்கொடி நாட்டியிருக்கிறது. அடுத்து நடைபெற உள்ள 5 தொகுதி இடைத்தேர்தலிலும் இது எதிரொலிக்கும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

## இடைத்தேர்தல் வெற்றி; அமைச்சர்களுடன் தனது பாணியில் கொண்டாடிய முதல்வர் விஜய்



தாராபுரம் மற்றும் மதுராந்தகம் இடைத்தேர்தல்கள் தமிழக அரசியல் வட்டாரத்தில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தன. இந்தத் தொகுதிகளில்தவெகவேட்பாளர்கள் வெற்றி பெறுவது சவாலானதாக இருக்கும் எனக் கணிக்கப்பட்ட நிலையில்,தாராபுரத்தில்சத்தியபாமா வெற்றி பெற்றுள்ளார். மதுராந்தகத்தில் மரகதம் குமரவேலின் தேர்தல் செயல்பாடும் கவனம் பெற்றுள்ளது.

இந்த முடிவுகள் தவெகவின் தேர்தல் செயல்பாடு குறித்த விவாதத்தை மீண்டும் முன்னிலைப்படுத்தியுள்ளன.

ஏற்கெனவே அதிமுகவிலிருந்து தமிழக வெற்றிக் கழகத்திற்குத் தாவிய மரகதம் குமரவேல் மற்றும் சத்தியபாமாஆகியோர்மீதுஅதிருப்தி நிலவியதாகக்கூறப்பட்டது.அவர்கள் தங்களது தொகுதிகளில் பிரசாரத்திற்குச் சென்றபோது, சில இடங்களில் எதிர்ப்புக் குரல்களும் கோஷங்களும் எழுப்பப்பட்டன. இந்தச் சூழலில், இரு வேட்பாளர்களும் தேர்தலில் எதிர்கொண்ட சவால்களைக் கடந்து வாக்காளர்களின் ஆதரவைப் பெற்றிருப்பது அரசியல் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து, முதல்வர் விஜய் அமைச்சர்கள் என். ஆனந்த், ஆதவ் அர்ஜுனா மற்றும் நிர்மல் குமார் ஆகியோருடன் வெற்றியைக் கொண்டாடிய புகைப்படங்கள் வெளியாகியுள்ளன. இந்தப்புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றன.

தாராபுரத்தில் சத்தியபாமாவின் வெற்றியும், மதுராந்தகத்தில் தவெகவின் தேர்தல் செயல்பாடும் கட்சியினரிடையே உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளன. இடைத்தேர்தலுக்குமுன்பாகநிலவிய எதிர்பார்ப்புகள், வேட்பாளர்கள் மீதான விமர்சனங்கள் மற்றும் விஜய்யின் தீவிரப் பிரசாரம் ஆகியவற்றுக்கு மத்தியில் கிடைத்த இந்த முடிவுகள் தவெகவுக்கு அரசியல் ரீதியாக முக்கியத்துவம் பெற்றுள்ளன.

# கோவை, நீலகிரி, தேனியில் கனமழைக்கு வாய்ப்பு



சென்னை: தமிழகத்தில் கோவை, தேனி நீலகிரி ஆகிய 3 மாவட்டங்களில் நாளை (அக்.10) கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வுமையம்வெளியிட்ட செய்திக் குறிப்பு: குமரிக்கடல் பகுதிகளிலிருந்து வடக்கு உள் கர்நாடகா வரை தமிழகம் மற்றும் தெற்கு உள் கர்நாடகா வழியாக சுமார் 0.9 கி.மீ உயரத்தில் ஒரு காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக தமிகத்தில் (அக்.10) கோவை மாவட்டத்தின் மலை பகுதிகள் மற்றும் நீலகிரி, தேனி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல், பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும்.

திண்டுக்கல், விருதுநகர், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம், தூத்துக்குடி, தென்காசி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மிதமான மழை பெய்யும், இதர தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.

அக்.11, 12 தேதிகளில் நீலகிரி, கோவை, திண்டுக்கல், விருதுநகர், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம், தூத்துக்குடி, தேனி, தென்காசி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழையும், இதர தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசான மழையும் பெய்யும்.

அக்.13 முதல் 15-ம் தேதி வரை மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்கள் மற்றும் தென் தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழையும், இதர தமிழகத்தில்ஓரிருஇடங்களில்லேசானமழையும் பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை (அக்.10) வானம் ஓரளவு மேகமூட்டத்துடன்காணப்படும். மழைக்கு வாய்ப்பில்லை.

மழைப் பொழிவு:

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணி நிலவரப்படி, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக நீலகிரி மாவட்டம் அழகரை எஸ்டேட்டில் 10 செ.மீ, குன்னூர், எடப்பள்ளியில் தலா 9 செ.மீ, பர்லியாரில் 9 செ.மீ, கோவை மாவட்டம் மக்கினம்பட்டி, ராமநாதபுரம் மாவட்டம் கடலாரியில் தலா 6 செ.மீ மழை பதிவாகியுள்ளது.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# பெர்லின் மராத்தானில் சாதனை படைத்த உசேன் பட்டேலுக்கு ஈரோடு சோல்சாப் ரன்னர்ஸ் கிளப் சார்பில் பாராட்டு விழா





ஜெர்மனியில் நடைபெற்ற உலகப் புகழ்பெற்ற சர்வதேச பெர்லின் மராத்தான் போட்டியில் பங்கேற்று ஈரோட்டிற்குப் பெருமை சேர்த்த தடகள வீரர் உசேன் பட்டேலுக்குப்பாராட்டுவிழாநடைபெற்றது. உலக அளவில் மிக முக்கியத்துவம் வாய்ந்த தடகள நிகழ்வுகளில் ஒன்றான பெர்லின் மராத்தான் போட்டி கடந்த செப்டம்பர் 27 (27.09.2026) அன்று ஜெர்மனியில் விமரிசையாக நடைபெற்றது. பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தலைசிறந்த ஓட்டப்பந்தய வீரர்கள் பங்கேற்ற இக்கடினமான போட்டியில், ஈரோட்டின் சார்பில் உசேன் பட்டேல் கலந்துகொண்டார். இதில் நிர்ணயிக்கப்பட்ட 42.195 கிலோ மீட்டர் முழு மராத்தான் தூரத்தை, அவர் 3 மணி நேரம் 43 நிமிடங்கள் 53 வினாடிகளில் (3:43:53) வெற்றிகரமாகக் கடந்து சர்வதேச அரங்கில் சாதனை படைத்து ஈரோடு மாவட்டத்திற்கும் தமிழ்நாட்டிற்கும் பெரும் பெருமை சேர்த்துள்ளார். சர்வதேச அளவில் ஈரோட்டின் பெயரை நிலைநிறுத்தியுள்ள இவரைப் பாராட்டும் வகையில், ஈரோடு சோல்சாப் ரன்னர்ஸ் கிளப் சார்பாக ஈரோடு ருக்ரா மஹாலில் பாராட்டு விழா நடைபெற்றது. விழாவில், தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் ஈரோடுமாவட்டத்தலைவர் வி.எம்.வெங்கிடுசாமி நேரில் கலந்துகொண்டு, சாதனையைப் பாராட்டி பொன்னாடை போர்த்தி, நினைவுப் பரிசுகளை வழங்கி உசேன் பட்டேலைச்சிறப்பித்தார். இந்நிகழ்வில் பேசிய மாவட்டத் தலைவர் வி. எம். வெங்கிடுசாமி, சர்வதேச அளவில் கடின உழைப்பாலும் விடாமுயற்சியாலும் ஈரோட்டுக்கு உலகளாவிய நற்பெயரைஈட்டித்தந்துள்ள உசேன் பட்டேலின் சாதனை இளைஞர்களுக்குப் பெரும் ஊக்கமாக அமையும் என்று வாழ்த்திப் பாராட்டினார். இவ்விழாவில் ஈரோடு சோல்சாப் ரன்னர்ஸ் கிளப்பின் நிர்வாகிகள் பிரபு, சந்தோஷ், ராகவ், சதீஷ்,நந்தகுமார்,சேக்கு, சிவசங்கரன் மற்றும் நித்யா உட்பட முக்கியப் பிரமுகர்கள் மற்றும் விளையாட்டு ஆர்வலர்கள் திரளாகக் கலந்துகொண்டு தங்கள் வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

# மதுரை வடமலையான் மருத்துவமனையில் அதிநவீன ரோபோடிக் அறுவைசிகிச்சை அறிமுகம்



தென் தமிழகத்தில் துல்லியமான மற்றும் உலகத்தரம் வாய்ந்த மருத்துவ சேவைகளில் மற்றொரு புதிய சகாபதத்தை உருவாக்கும் வகையில்,மதுரை வடமலையான் மருத்துவமனை அதிநவீன ரோபோடிக் அறுவைசிகிச்சை முறையை அதிகாரப்பூர்வமாக அறிமுகப்படுத்தியுள்ளது இப்புதிய தொழில்நுட்பம், மேம்பட்ட மற்றும் எளிய முறையில் உலகப் புகழ்பெற்ற ரோபோடிக் சிகிச்சையை மதுரை மற்றும் சுற்றியுள்ள பொதுமக்களுக்கு மிக அருகில் கொண்டுசேர்க்கிறது.

இதன் துவக்கவிழா வடமலையான் மருத்துவமனையில் நடைபெற்றது மருத்துவமனையின் இணைநிர்வாகஇயக்குநர் சந்திரா புகழகிரி குத்துவிளக்கேற்றித் துவக்கிவைத்தார்.

மருத்துவமனையின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் வ.புகழகிரி வரவேற்றுப் பேசினார், அப்போது பேசுகையில், "கடந்த 70 ஆண்டுகளாக மருத்துவத் துறையில் பல்வேறு புதுமைகளையும், உயர்தா சேவைகளையும் வழங்கிவரும் வடமலையான் மருத்துவமனை

தற்போது எஸ்எஸ்ஐ ரோபோடிக் அறுவைசிகிச்சை முறையை அறிமுகப்படுத்துகிறது. மேம்பட்ட எளிய மற்றும் அனைவருக்கும்கிடைக்கக்கூடிய இச்சிகிச்சை மனிதநேயத்துடன் கூடிய நவீன மருத்துவத்தின் மிக முக்கிய மைல்கல்லாகும்" என்றார்.

ஹைதராபாத் பரீத்தி சிறுநீரக மருத்துவமனையின் நிர்வாக இயக்குநர் மற்றும் சிறுநீர்கவியல் துறைத் தலைவர் Vaddichandramohanசிறப்புவிருந்தினராகக் கலந்துகொண்டு. இந்த அதிநவீன ரோபோடிக் அறுவைசிகிச்சை முறையைத் துவக்கி வைத்து அதன் சிறப்பம்சங்கள் மற்றும் மருத்துவ நன்மைகள் குறித்து விளக்கவு ரையாற்றினார் அதைத்தொடர்ந்து, எஸ்எஸ்

இன்னோவேஷன்ஸ் (துணைத் தலைவர் சீனிவாசரெட்டி வாழ்த்திப் பேசினார்

இறுதியாக, மருத்துவ சேவைகள் இயக்குநர் எஸ். சுந்தரராஜன் நன்றி கூறினார். நிகழ்வில் இதயம் மற்றும் நெஞ்சக அறுவைசிகிச்சை நிபுணர் பி. பாபு மருத்துவ இயக்குநர் வி. பாப்புநாதன் புற்றுநோய் அறுவைசிகிச்சை நிபுணர் எஸ் அழகுகணேஷ் இரைப்பை மற்றும் குடல் அறுவைசிகிச்சை நிபுணர் என் ஆர். வெங்கடேஷ். சிறுநீரக மருத்துவர்கள் ஜே.சதீஷ்கின்னி, விவேக் மகப்பேறு மருத்துவர்கள் எஸ். பாலசரஸ்வதி, டாக்டர் பாரதி டாக்டர்டி கார்த்திகாமற்றும் பொது அறுவைசிகிச்சை நிபுணர் அழகுமுத்து மற்றும்

மருத்துவர்கள், பணியாளர்கள் திரளாகப் பங்கேற்றனர்.

# வேப்பூரில் அன்புமணி ராமதாஸ் பிறந்தநாள் விழா: 500 பேருக்கு அன்னதானம்



கடலூர் மாவட்டம் வேப்பூரில், பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர்அன்புமணிராமதாஸின் பிறந்தநாளை முன்னிட்டு அன்னதானம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நல்லூர் மேற்கு ஒன்றியச் செயலாளர் வேப்பூர் திலீப் தலைமை தாங்கினார். பாட்டாளி மக்கள் கட்சியின் முன்னாள் மாவட்டச் செயலாளர் டாக்டர் இ.கே. சுரேஷ் சிறப்புஅழைப்பாளராகக் கலந்து கொண்டார்.

இதையொட்டி, வேப்பூர் கூட்டுரோட்டில் 500-க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு டாக்டர் இ. கே. சுரேஷ் அன்னதானம் வழங்கினார்.

தொடர்ந்து, தூய்மைப் பணியாளர்களுக்கு வேட்டி, சேலை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளையும்வழங்கினார்.

இதன் தொடர்ச்சியாக, வேப்பூர்அரசு மருத்துவமனை வளாகத்தில் சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலியுறுத்தும் வகையில் பல்வேறு வகையான மரக்கன்றுகளை நட்டு வைத்தார். இந்நிகழ்ச்சியில் வன்னியர் சங்கத் தலைவர்ச.சிங்காரவேல், மாவட்டத் துணைச் செயலாளர் செந்தில்குமார், மாநிலச் செயற்குழு உறுப்பினர் பழனிசாமி, சட்ட ஆலோசகர் தனபாண்டியன், துரைவெற்றி மற்றும் பாட்டாளி மக்கள் கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# செங்கோட்டையில் குடிநீர் குழாய் உடைந்து 4 நாட்களாக வீணாகும் தண்ணீர்

## அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க பொதுமக்கள் கோரிக்கை



தென்காசி மாவட்டம், செங்கோட்டை பேருந்து நிலையத்திலிருந்து காலாங்கரை செல்லும் வழியில் உள்ள சுப்பஞ்செட்டி பாலம் அருகே குடிநீர் குழாய் உடைந்து, கடந்த நான்கு நாட்களாக தண்ணீர் வீணாகச் சாலையில் ஆறுபோல் ஓடிக்கொண்டிருக்கிறது.

வீடுகளுக்குக் குடிநீர் தேவைக்கே வாரத்திற்கு ஒருமுறை மட்டுமே தண்ணீர் வழங்கப்படும் நிலையில், குழாய் உடைப்பால் குடிநீர் தொடர்ந்துவீணாகிவருவது அப்பகுதி மக்களிடையே வேதனையை ஏற்படுத்தியுள்ளது குழாய் உடைப்பு குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதுவரை உரிய நடவடிக்கை எனப் பொதுமக்கள் குற்றம்சாட்டுகின்றனர். தடுக்கவும், பொதுமக்களின் குடிநீர் தேவையைக் கருத்தில் கொண்டும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாகக் குழாய் உடைப்பைச் சரிசெய்ய வேண்டும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்

# கழுகுமலையில் த.வெ.க. ஆலோசனைக் கூட்டம்!

## உள்ளாட்சித் தேர்தலில் அனைத்து இடங்களிலும் வெற்றி பெற உழைக்க நிர்வாகிகளுக்கு அறிவுறுத்தல்



கழுகு மலையில் தமிழக வெற்றிக் கழகத்தின் (த.வெ.க.) ஆலோசனைக் கூட்டம் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு குருவிகுளம் கிழக்கு ஒன்றியச் செயலாளர் முத்துக்காளை, மேற்கு ஒன்றியச் செயலாளர்கவுதம்ஆகியோர் தலைமை தாங்கினர். கழுகுமலை நகரச் செயலாளர் வினோத் வரவேற்றார். சிறப்பு அழைப்பாளர்களாகத் தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் பாலசுப்பிரமணியன், தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் மாரியப்பன் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்கள்

அப்போது, வரவிருக்கும் உள்ளாட்சித் தேர்தலில் த.வெ.க. அனைத்து இடங்களிலும் வெற்றி பெறும் வகையில் நிர்வாகிகள் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும் என்றும், அதற்கான செயல்திட்டங்கள் குறித்தும் பல்வேறு ஆலோசனைகளை வழங்கினர்.

இக்கூட்டத்தில் கழுகுமலை பொருளாளர் ஜீவ எபனேசர், குருவிகுளம் கிழக்கு ஒன்றியத் துணைச் செயலாளர்கள் கடற்கரை, வேல்முருகன், சண்முகராஜ், சிதம்பராபுரம் கிளைச் செயலாளர் ராஜசேகர் மற்றும்சிங்காரபாண்டியன், பிரகாஷ், விஜய், கழக நிர்வாகி கண்ணன் உள்ளிட்ட நிர்வாகிகள், கிளைச் செயலாளர்கள், ஒன்றிய நிர்வாகிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



தென்காசி மாவட்டம் கீழப்பாவூர் ஒன்றியம் செல்லதாயார்புரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலை பள்ளியில் சில்ரன் சாரிடபிள் டிரஸ்ட் சார்பில் இன்று பள்ளி குழந்தைகளுக்கு குப்பைகளை பயன்படுத்துவது பற்றியும், குப்பைகளை கண்ட இடங்களில் போடாமல் குப்பை தொட்டிகளை பயன்படுத்த வேண்டும் என்பதை அறிவுறுத்தும் வகையில் அனைத்து வகுப்பறைகளுக்கும் குப்பை தொட்டிகள் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் சில்ரன் சாரிடபிள் டிரஸ்ட் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் டிக்சன் குமார், பள்ளியின் தலைமை ஆசிரியர் உமா, பள்ளி மேலாண்மை குழு தலைவி மேரி வீரரத்தினகுமார், பள்ளியின் ஆசிரியர்கள் மற்றும் குழந்தைகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# தூத்துக்குடியில் இம்மானுவேல் சேகரனார் பிறந்த நாள்: திமுக மற்றும் சங்க நிர்வாகிகள் மரியாதை



தூத்துக்குடி எட்டையபுரம் சாலையில் அமைந்துள்ள வடக்கு மாவட்ட திமுக அலுவலகமான கலைஞர் அரங்கில், தியாகி இம்மானுவேல் சேகரனாரின் 102-வது பிறந்த நாள் விழா வடக்கு மாவட்ட திமுக சார்பில் தியாகி இம்மானுவேல் சேகரனார் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப் படத்திற்கு தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் முன்னாள் அமைச்சருமான பி. கீதா ஜீவன் மலர் தூவி, மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இதைத்தொடர்ந்து தியாகி இம்மானுவேல் சேகரனாரின் 102-வது பிறந்த நாளையொட்டி அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப் படத்திற்கு முத்தரையர்நகர் தர்மகர்த்தா எஸ்.ஆர்.சந்தனராஜ்மற்றும்அண்ணா சங்குகுளி தொழிற்சங்க தலைவர் இசக்கிமுத்து உள்ளிட்ட சங்க நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். நிகழ்ச்சியில்தூத்துக்குடி மாவட்ட அண்ணா சங்குகுளி தொழிற்சங்க துணைத் தலைவர் மாரிலிங்கம், அண்ணா சங்குகுளி தொழிற்சங்க செயலாளர் முருகையா, ஆலோசகர் எஸ்.ஆர். சந்தனராஜ் மகாராஜா, அகமது மற்றும் முத்தரையர்நகர் ஊர் தலைவர் கருப்பணன், முத்தரையர்நகர் ஊர் செயலாளர் ராஜேந்திரன்,முத்தரையர் கனவா மீன்பிடி நலசங்கதலைவர் முனியசாமி, துணைத்தலைவர் ராஜேந்திரன், செயலாளர் பாலு, துணைச்செயலாளர் ஜெகன், ஒருங்கிணைப்பாளர்வெள்ளைச்சாமி, ஆலோசகர் இசக்கிமுத்து நிா்வாகிகள் கலந்து கொண்டனர்

# ஈரோட்டில் லட்சிய ஜனநாயக கட்சி பொதுச்செயலாளர் நெல்லை ஜீவா பிறந்தநாள்: முதியோர் இல்லத்தில் அன்னதானம் வழங்கி கட்சியினர் கொண்டாட்டம்



ஈரோடு: லட்சிய ஜனநாயக கட்சியின் பொதுச் செயலாளர் நெல்லை ஜீவா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, ஈரோடு லக்காபுரத்தில் அமைந்துள்ள மரிய நிவாஸ் முதியோர் இல்லத்தில் தங்கி இருக்கும் முதியோர்களுக்கு மதிய உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு ஈரோடு மாவட்ட செயலாளர் பொறியாளர் அருள்குமார் தலைமை தாங்கினார். இதில் ஈரோடு தொகுதி பொறுப்பாளர்கள் ராபின் டேவிட் குமார்,சுரேஷ்,சரஸ்வதி, கொடுமுடி ஒன்றிய செயலாளர் மின்னல் நாகராஜ்,ஒன்றியதுணை செயலாளர் சுந்தர ராஜன், பாசூர் பேரூராட்சி செயலாளர் மாரிசாமி, மொடக்குறிச்சி பொறுப்பாளர் அருண் மற்றும் அந்தோணி பீட்டர், சதாசிவம்,பாபு,மாதேஷ்,பிரவீன் குமார், ரஞ்சித் ஆகியோர் திரளாகக் கலந்து கொண்டனர். தொடர்ந்து மாவட்ட செயலாளர் பேசுகையில், லட்சிய ஜனநாயக கட்சியின் சார்பாக ஈரோடு மற்றும்மொடக்குறிச்சி பகுதிகளில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருவதாகவும், கட்சியில் ஏராளமானோர் ஆர்வமுடன் இணைந்து வருவதாகவும், ஈரோடு மாவட்டம் முழுவதும் கட்சியை அடித்தள அளவில் வலுப்படுத்துவதே தங்களின் தலையாய நோக்கம் என்றும் தெரிவித்தார். இந்நிகழ்வின் போது முதியோர் இல்லத்தில் இருக்கும் முதியோர்கள் இன்று பிறந்தநாள் காணும் பொதுச் செயலாளர் நெல்லை ஜீவா அவர்கள் நலமுடன் வாழ தங்களது மனமார்ந்த வாழ்த்துக்களையும் பிரார்த்தனைகளையும் தெரிவித்துக் கொண்டு மதிய உணவை மகிழ்ச்சியுடன் உட்கொண்டனர்.

## தூத்துக்குடியில் பிரமாண்டமாக திறக்கப்பட்ட வசந்த் & கோ புதிய கிளையை வசந்த் & கோ நிறுவனத்தின் நிறுவனர் தமிழ்ச்செல்வி வசந்தகுமார் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்



தூத்துக்குடி மாநகரில் வி.இ.ரோடு, அந்தோணியார் கோவில் அருகே புதுப்பிக்கப்பட்ட வசந்த் & கோ நிறுவனத்தின் புதிய கிளை பிரமாண்டமாக திறக்கப்பட்டது. திறப்பு விழாவில் வசந்த் & கோ நிறுவனத்தின் நிறுவனர் தமிழ்ச்செல்வி வசந்தகுமார் ரிப்பன் வெட்டி புதிய கிளையை திறந்து வைத்தார். இதனைத் தொடர்ந்து நடைபெற்ற குத்துவிளக்கு ஏற்றும் நிகழ்ச்சியில் தமிழ்ச்செல்வி வசந்தகுமார், சண்முகசுந்தரம், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, முன்னாள் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் டேனியல்ராஜ், சுடலையாண்டி, காங்கிரஸ் மாவட்டத் தலைவர்கள் சகாயராஜ், பெருமாள்சாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றினர்.

புதிய கிளையில் டிவி, பிரிட்ஜ்,வாஷிங்மெஷின், செல்போன், லேப்டாப் உள்ளிட்ட பல்வேறு எலக்ட்ரானிக் சாதனங்களும், கட்டில், மெத்தை உள்ளிட்ட வீட்டு உபயோகப் பொருட்களும் விற்பனைக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

வாடிக்கையாளர்களைக் கவரும் வகையில் திறப்பு விழாவை முன்னிட்டு சிறப்பு சலுகைகளும் அறிவிக்கப்பட்டுள்ளன. அதன்படி, 25 ஆயிரத்துக்கு மேல் பொருட்கள் வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு தங்க நாணயமும், 1 லட்சத்துக்கு மேல் பொருட்கள் வாங்குபவர்களுக்கு கேஸ் ஸ்டவ் இலவசமாகவும் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விழாவில் சிறப்பு சலுகைகள் குறித்த அறிவிப்பு வெளியான நிலையில், திறப்பு விழா நடைபெற்ற முதல் நாளிலேயே தூத்துக்குடி மாநகரம் மட்டுமின்றி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகள் மற்றும் சுற்றுவட்டா ரங்களில் இருந்தும் ஏராளமான பொதுமக்கள் புதிய கிளைக்கு வருகை தந்தனர்.

பொருட்களை வாங்குவதற்காக வாடிக்கையாளர்கள் ஆர்வத்துடன் குவிந்ததால்,புதிய கிளை திறப்பு விழா களைகட்டியது. வாடிக்கையாளர்களின் வசதிக்கேற்ப பொருட்களை பார்வையிட்டு தேர்வு செய்து வாங்கும் வகையில் கிளையில் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

திறப்பு விழாவில் அரசியல் பிரமுகர்கள், தொழிலதிபர்கள், வாடிக்கையாளர்கள், பொதுமக்கள் மற்றும் வசந்த் & கோ நிறுவன நிர்வாகிகள், ஊழியர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

தூத்துக்குடியில் புதிய கிளை திறக்கப்பட்டுள்ளதன் மூலம், மாநகரம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்களுக்கு எலக்ட்ரானிக் மற்றும்வீட்டு உபயோகப் பொருட்களை ஒரே இடத்தில் வாங்குவதற்கான கூடுதல் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் காசநோய் ஒழிப்பு விழிப்புணர்வு குறித்த துண்டு பிரசுரத்தை ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் (08.10.2026) அன்று வெளியிட்டார். உடன் ஈரோடு மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார், துணை இயக்குநர் (காசநோய்) மரு.பி.ரமேஷ்பாபு, துணை இயக்குநர் (மை பாரத்) ரிம்யா அவர்கள் உட்பட பலர் உள்ளனர்.

## தூத்துக்குடியில் தியாகி இம்மானுவேல் சேகரனார் 102வது பிறந்த நாள் : முன்னாள் அமைச்சர் கீதா ஜீவன் மரியாதை



தியாகி இம்மானுவேல் சேகரனாரின் 102-வது பிறந்த நாளை முன்னிட்டு, தூத்துக்குடியில் வடக்கு மாவட்ட திமுக சார்பில் அவரது திருவுருவப் படத்திற்கு முன்னாள் அமைச்சரும், வடக்கு மாவட்டச் செயலாளருமான பி. கீதா ஜீவன் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

தூத்துக்குடி எட்டையபுரம்சாலையில்அமைந்துள்ள திமுக தலைமை அலுவலகமான கலைஞர் அரங்கில், தியாகி இம்மானுவேல் சேகரனாரின் 102-வது பிறந்த நாள் விழா வடக்கு மாவட்ட திமுக சார்பில் கொண்டாடப்பட்டது. இதனை முன்னிட்டு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப் படத்திற்குத் தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் முன்னாள் அமைச்சருமான பி. கீதா ஜீவன்மலர்தூவி,மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சண்முகையா, மாநகரச் செயலாளர் ஆனந்த சேகரன், மாநகராட்சி துணை மேயர் ஜெனிட்டா, மாவட்ட அவைத்தலைவர் செல்வராஜ், மாவட்டத் துணைச்செயலாளர் ராஜ்மோகன் செல்வின், பொருளாளர் ரவீந்திரன், மாநிலப் பொறியாளர் அணித் துணைச்செயலாளர் அன்பழகன்,ஒன்றியச் செயலாளர்கள் ஜெயக்கொடி, சரவணக்குமார், பகுதி செயலாளர்கள் சுரேஷ்குமார், மேகநாதன், ஜெயக்குமார், ஆஸ்கர், சிவக்குமார், ராமகிருஷ்ணன், மாநகராட்சி மண்டலத்தலைவர் வழக்கறிஞர் பாலகுருசுவாமி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## காவல் ஆய்வாளர் மீது நடவடிக்கை எடுக்க கோரி கலெக்டர் அலுவலகத்தில் வல்லவன் கோட்டை கிராம மக்கள் மனு



நெல்லை மாவட்டம் மானூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட வல்லவன் கோட்டை கிராமத்தைச் சேர்ந்த பொதுமக்கள் தங்கள் ஊரில் அமைக்கப்பட்ட கொடி கம்பத்தை அகற்ற முயற்சிக்கும் காவல் ஆய்வாளர் மீது நடவடிக்கை எடுக்க கோரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் தமிழக மக்கள் முன்னேற்றக் கழகம் மாவட்ட இளைஞரணி செயலாளர் வக்கீல் முத்துப்பாண்டி தலைமையில் மனு அளித்தனர் இது குறித்து கிராம மக்கள் கூறுகையில் வல்லவன் கோட்டை கிராமத்தில் தேவேந்திரகுல வேளாளர் சமுதாய மக்கள் வசித்து வருகிறோம் ஊரில் உள்ள பொதுமக்கள் பல்வேறு அரசியல் கட்சிகளில் இருந்தாலும் சமுதாய ஒற்றுமை வலியுறுத்தும் வகையில் தேவேந்திர சமுதாயத்திற்கான கொடி மட்டுமே ஊரில் பறக்க விடப்படுகிறது அத்துடன் புரட்சியாளர் சட்ட மாமேதை அம்பேத்கரின் படமும் வைக்கப்பட்டுள்ளது இந்த கொடிக்கம்பம் கோயிலுக்கு சொந்தமான எங்களது பட்டா நிலத்திலேயே அமைக்கப்பட்டுள்ளது இதுவரை ஊரில் எந்தவித சாதி பிரச்சனையோ அல்லது இந்த கொடி கம்பத்தால் யாருக்கும் இடையூறோ ஏற்பட்டது இல்லை இதன் மீது எந்த புகார் இல்லாத நிலையில் சமீபகாலமாக எங்களது பகுதி காவல் ஆய்வாளர் இந்த கொடி கம்பத்தை அகற்றுவதற்கு தீவிர முயற்சி மேற்கொண்டு வருகிறார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் கொடியை அகற்ற முயற்சித்ததுடன் அதற்கு பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்ததால் கிராம மக்கள் மீது பொய் வழக்குகளையும் பதிவு செய்துள்ளார் எனவே பட்டா நிலத்தில் உள்ள கொடி கம்பத்தை அகற்ற நினைக்கும் காவல் ஆய்வாளர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க கோரி கோட்டாட்சியர். கலெக்டர் மற்றும் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ஆகியோரிடம் மனு அளிக்க வந்துள்ளோம் என வல்லவன் கோட்டை கிராம மக்கள் தெரிவித்தனர்.

## தேனியில் தியாகி இம்மானுவேல் சேகரனின் 102வது பிறந்தநாள் விழா கொண்டாட்டம்



தேனி பழைய பேருந்து நிலையம் அருகே தியாகி இம்மானுவேல் சேகரனின் 102-வது பிறந்தநாள் விழா வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

தமிழக மக்கள் முன்னேற்றக் கழகத்தின் நிறுவனர்தலைவர் 'தமிழக நில வேந்தர்' டாக்டர் பி. ஜான் பாண்டியன் அவர்களின் உத்தரவின் பேரில், தேனி கிழக்கு மாவட்ட தமிழக மக்கள் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இந்நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

விழாவின்போது,தேனி நேரு சிலை அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த சுதந்திர போராட்ட வீரரும்,சமூகநீதி போராளியுமான மாவீரர் தியாகி இம்மானுவேல் சேகரனின் திருவுருவப் படத்திற்கு மாலையணிவித்து, மாலை மரியாதையுடன் புகழ் வணக்கம் செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி பிறந்தநாள் கொண்டாடப்பட்டது.

இயக்குநர் இமையம் பாரதிராஜாவுக்கு தேனி மாவட்டத்தில் சிலை அமைக்க சட்டமன்றத்தில் அரசு அறிவித்தது போல, தேனி மாவட்டத்தில் பெரும்பான்மையாக வாழும் தேவேந்திரகுல வேளாளர் சமூக மக்களின் கோரிக்கையை ஏற்று,சமூகநீதி போராளி தியாகி இம்மானுவேல் சேகரனுக்கு தேனி மாவட்டத்தில் திருவுருவ வெண்கலச் சிலை அமைக்க மாவட்ட நிர்வாகமும் தமிழக அரசும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பட்டியல் பிரிவில் இருந்து விலக்கு: தேவேந்திரகுல வேளாளர் சமுதாய மக்களை பட்டியல்பிரிவில்இருந்து வெளியேற்ற வேண்டும் என்ற தங்களது நீண்ட நாள் கோரிக்கையை மத்திய, மாநில அரசுகள் உடனடியாக நிறைவேற்ற வேண்டும்.

தியாகி இம்மானுவேல் சேகரனின் பிறந்தநாளை முன்னிட்டு நடத்தப்பட்ட இந்நிகழ்ச்சி, அவரது தியாகத்தையும் சமூகப் பங்களிப்பையும் நினைவுகூரும் வகையில் அமைந்ததோடு, தேவேந்திரகுல வேளாளர் சமுதாய மக்களின் நீண்டகால உரிமைக் கோரிக்கைகளை அரசின் கவனத்திற்கு எடுத்துச் செல்லும் நிகழ்வாகவும் நிறைவுற்றது.

### டி.ஐ.சைக்கிள் ஸ்டோர் மற்றும் ஜெமினி சைக்கிள் ஸ்டோர்ஸ் சார்பாக

## கோவையில் நடைபெற்ற பிரமாண்ட துணை விற்பனையாளர்கள் மாநாடு மற்றும் விற்பனையாளர்களுக்கான கலந்தாய்வு கூட்டம்

### கோவை சாய்பாபா காலனியில் உள்ள தனியார் உணவக அரங்கில் கோலாகலமாக நடைபெற்றது



ஈரோடு மற்றும் கோவையை சேர்ந்த ஜெமினி சைக்கிள் ஸ்டோர் இணைந்து, இரு மாவட்ட டிஸ்டிபூட்டர்ஸ் சார்பாக, கோவை சாய்பாபா காலனியில் உள்ள ஹாஸ் சிக்ஸ் உணவக அரங்கில் துணை விற்பனையாளர்கள் மாநாடு மற்றும் விற்பனையாளர்களுக்கான கலந்தாய்வு கூட்டத்தை கோலாகலமாக நடத்தியது. இந்த கூட்டத்தை ஜெமினி சைக்கிள் ஸ்டோர் உரிமையாளர் துளசிமணி தலைமை தாங்கினார். ஜெமினி சைக்கிள் ஸ்டோர் மேனேஜ்மென்ட் சார்பாக அர்ஜுனன் முன்னிலை வகித்தார்.

இந்த கூட்டத்தில் ஈரோடு மற்றும் கோவை மாவட்டத்தில் உள்ள அனைத்துசப்டீலர்களும் கலந்து கொண்டனர். மேலும் இந்த சந்திப்பு குறித்து செய்தியாளர்களை சந்தித்து பேசிய ஜெமினி சைக்கிள் ஸ்டோர் உரிமையாளர் துளசிமணி கூறியதாவது.. டிஐ சைக்கிள் ஆப் இந்தியா, நிறுவனம் கடந்த 40 ஆண்டுகளாக சைக்கிள் தயாரிப்பு துறையில் உள்ளதாகவும்,40 ஆண்டுகளாக பல்வேறு மாடல்களில் சைக்கிள்களை உருவாக்கி அதனை இந்திய சந்தைகளில் விற்பனை செய்து தனக்கென்று ஒரு இடத்தை பிடித்துள்ளதாக தெரிவித்தார். மேலும் மக்கள் அனைவரும் சைக்கிள் ஓட்டுவதால் அவர்களின் உடலில் கெட்ட கொழுப்புகள் படிவதை தடுப்பதாகவும் தெரிவித்தார். ஆரோக்கிய வாழ்வு வாழ தினமும் சைக்கிள் ஓட்டுவது அவசியம் என்று கூறிய அவர், கோவை மற்றும் ஈரோடு பகுதியில் உள்ள அனைத்து சப்டீலர்களுக்கும், டி.ஐ சைக்கிள்ஸ் ஆப் இந்தியா நிறுவனத்தின் ரீஜினல் ஹெட் பாரதி, முழு ஒத்துழைப்பு அளித்து, வருவதாக கூறினார். சிறு குறு விற்பனையாளர்கள், டீலர்களின் தேவைகளை அறிந்து விற்பனைக்கான அனைத்து உதவிகளையும் இந்த நிறுவனம் செய்து தருகின்றதாக தெரிவித்த அவர், தற்போது டிஐ சைக்கிள் நிறுவனத்தின் சைக்கிள்கள், இந்தியா முழுவதும் விற்பனையாகி அனைத்து தலைமுறையினரும் மகிழ்ச்சிபடுத்தியிள்ளதாகவும், தற்போது புதிய புதிய மாடல்களை அறிமுகம் செய்துள்ளதாகவும், தெரிவித்தார். மேலும் குழந்தைகள் முதல் அனைத்து தரப்பினரும் விரும்பகூடிய வகையில், பிஎஸ்ஏ, ஹெர்குலஸ், மான்ட்ரா, ரோடியோ போன்ற முன்னணி பிராண்ட்களை தயாரித்து, இந்திய சந்தைகளில், அதிக அளவில் விற்பனை செய்து வருவதாக தெரிவித்தார். கூடுதலாக,தற்பொழுது மின்சார சைக்கிள்களையும் அறிமுகம் செய்துள்ளதாகவும், பெண்களுக்கென தனி மாடல்களும் தற்போது வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்

இந்த நிகழ்ச்சியில் ஜெமினி சைக்கிள் ஸ்டோர்கோவைமேளாளர் சண்முகம், டி. ஐ சைக்கிள் ஆப் இந்தியா சவுத் ஹெட் பாரதி, ரீஜினல் விற்பனை மேளாளர் வினோத், விற்பனை அதிகாரி சிவா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தலில் தவெக மாபெரும் வெற்றி:

## தூத்துக்குடியில் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் பட்டாசு வெடித்து இனிப்பு வழங்கி உற்சாகக் கொண்டாட்டம்



நடந்து முடிந்த மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டப்பேரவை இடைத்தேர்தலில் தமிழக வெற்றிக் கழகம் மாபெரும் வெற்றி பெற்றுள்ளதைத் தொடர்ந்து, தமிழகம் முழுவதும் தவெகவினர் இனிப்புகள் வழங்கி வெற்றியைக் கொண்டாடி வருகின்றனர்.

இதன் ஒருபகுதியாக, தூத்துக்குடி தொகுதி தமிழக வெற்றிக் கழகம் சார்பில், மாவட்டக் கழகச் செயலாளரும் தமிழக மீன்வளத் துறை அமைச்சருமான ஸ்ரீநாத்தின் ஆலோசனையின்படியும்,மாவட்ட நிர்வாகி கிஷோரின் அறிவுறுத்தலின்படியும் தூத்துக்குடி தென்பாகம் காவல் நிலையம் முன்பு சிறப்பான கொண்டாட்ட நிகழ்வு நடைபெற்றது.

இக்கொண்டாட்டத்திற்குத் தமிழக வெற்றிக் கழகத்தின் மாமன்ற உறுப்பினரும் வழக்கறிஞருமான சி. மந்திரமூர்த்தி தலைமை தாங்கினார். தவெக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் திரளாகக் கலந்து கொண்டு பட்டாசுகளை வெடித்தும், பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கியும் தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். செய்தியாளர்கள் சந்திப்பில் வழக்கறிஞர் மந்திரமூர்த்தி தெரிவித்ததாவது: "தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பேற்ற 150 நாட்களில் தமிழக முதல்வர் விஜய் செய்த வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனைகளுக்கும் நற்பணிகளுக்கும் கிடைத்த மகத்தான வெற்றியே இந்த இடைத்தேர்தல் வெற்றி ஆகும். இந்த இடைத்தேர்தல் மட்டுமல்லாது, இனி வரவிருக்கும் அனைத்துத் தேர்தல்களிலும் தமிழக முதல்வர் விஜயின் தலைமையிலான தமிழக வெற்றிக்கழகமே தொடர் வெற்றி பெறும். வெற்றிக்கு அரும்பாடுபட்ட கழகப் பொதுச்செயலாளரும் அமைச்சருமான புஸ்ஸி ஆனந்த் மற்றும் மீன்வளத்துறை அமைச்சர் ஸ்ரீநாத் ஆகியோருக்குத் தூத்துக்குடி தொகுதி தவெக சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம் என்று கூறினார்.

### ஈரோடு மாவட்டத்தில் தகவல் பெறும் உரிமைச்சட்டம் 2005 விழிப்புணர்வு வாரத்தை முன்னிட்டு

# விழிப்புணர்வு பேரணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி கொடியசைத்து துவக்கி வைத்தார்

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தகவல் பெறும் உரிமைச்சட்டம் 2005 விழிப்புணர்வு வாரத்தை முன்னிட்டு



விழிப்புணர்வு பேரணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (8.10.2026)அன்று கொடியசைத்து துவக்கி வைத்தார்.தகவல் பெறும் உரிமைச் சட்டம் -2025 விழிப்புணர்வு வாரம் 05.10.2026 முதல் 12.10.2026 வரை நடைபெற்று வருவதை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணியானது நடைபெற்றது. இப்பேரணியில் தகவல் பெறும் உரிமைச்சட்டம் -2005 தொடர்பான தகவல் தெரிந்தால் - உரிமை தெரியும், தகவல் பெறுவோம் - உரிமையை நிலைநாட்டுவோம், தகவல் அறியும் உரிமை மக்களின் உரிமை, தகவல் அறியும் உரிமை - ஜனநாயகத்தின் கண்கள் என்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளை அரசு அலுவலர்கள், பணியாளர்கள் கையில் ஏந்திச் சென்று வழியெங்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தி சென்றனர்.

இப்பேரணியானது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தொடங்கி, காளிங்கராயன் விருந்தினர் இல்லத்தில் சென்று, மீண்டும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் சென்றடைந்து. இப்பேரணியில் 100-க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

இப்பேரணியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிரண் ஸ்ருதி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) தேன்மொழி, துணை ஆட்சியர் (வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை பயிற்சி) சித்தார்த் உட்பட பலர் உள்ளனர்.

# ஈரோடு மாவட்டத்தில் கலெக்டர் ச.கந்தசாமி தலைமையில் "MY Bharat' திட்டம்

## இளைஞர்களின் பங்கேற்புக்கான வாய்ப்புகள் குறித்த அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மை பாரத் திட்டத்தின் மூலம் தொலைநோக்கு பார்வை, நோக்கங்கள், செயல்பாடுகள், டிஜிட்டல்தளம்மற்றும்இளைஞர்களின் பங்கேற்புக்கான வாய்ப்புகள் குறித்த அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் (08.10.2026) அன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில், MY Bharat திட்டத்தின் நோக்கங்கள், இளைஞர்களுக்கான தன்னார்வச் சேவை வாய்ப்புகள் மற்றும் டிஜிட்டல் தளத்தின் செயல்பாடுகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. மேலும்,15 முதல் 29 வயதுக்குட்பட்ட இளைஞர்களை மை பாரத் இணையதளத்தில் பதிவு செய்தல், கல்வி நிறுவனங்கள், NSS, NCC, பாரத சாரணர் மற்றும் வழிகாட்டி இயக்கம், இளைஞர் மன்றங்கள் மற்றும் அரசு துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல், இளைஞர்களின் திறன் மேம்பாடு மற்றும் சமூகப் பங்கேற்பை அதிகரித்தல் குறித்து ஆலோசிக்கப்பட்டது. அரசுத் துறைகளின் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வை இளைஞர்களிடையே ஏற்படுத்துதல், விளையாட்டுப் போட்டிகள் மற்றும் சமூக சேவை நடவடிக்கைகளில் மை பாரத் தன்னார்வலர்களைப் பங்கேற்கச் செய்தல், டிஜிட்டல் மோசடி விழிப்புணர்வு உள்ளிட்ட பொதுமக்கள் நலன் சார்ந்த செயல்பாடுகளில் அவர்களின் பங்களிப்பை அதிகரித்தல் ஆகியவை குறித்தும் விவாதிக்கப்பட்டது.

மேலும், இளைஞர்களின் பங்களிப்பை ஊக்குவிக்கும் கல்வி நிறுவனங்கள், தன்னார்வலர்கள் மற்றும் இளைஞர் மன்றங்களுக்கு அங்கீகாரம் வழங்குதல், அரசு துறைகளை MY Bharat இணையதளத்தில் இணைத்தல் மற்றும் பல்வேறு துறைகளுக்கிடையேயான ஒருங்கிணைப்பை வலுப்படுத்துதல் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. இக்கூட்டத்தில்,மைபாரத்திட்டத்தின் செயல்பாடுகளை மாவட்டம் முழுவதும் சிறப்பாகச் செயல்படுத்தவும், இளைஞர்களின் பங்கேற்பை அதிகரிக்கவும் தொடர்புடைய துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது. ஈரோடு மாவட்டம் முழுவதும் இளைஞர்களின் முழுமையான வளர்ச்சிக்கான ஒருங்கிணைந்த சூழலை உருவாக்குவதன் முக்கியத்துவம் குறித்து கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில், திட்டத்தின் துணை இயக்குநர் (மை பாரத்) ரம்யா, துணை ஆட்சியர் (வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை பயிற்சி) சித்தார்த், உட்பட பல்வேறு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# 'Don't use hammer to kill a fly': Supreme Court asks Centre, Delhi Police to lift blanket curbs on metro, trains



*The Supreme Court on Friday directed the Centre and Delhi Police to lift blanket restrictions on metro and railway services ahead of Saturday's proposed protests in Delhi, making it clear that security measures cannot amount to a complete prohibition on public transport and inconvenience millions of ordinary residents.*

*A bench, comprising Chief Justice of India Surya Kant and justices Joymalya Bagchi and V Mohana, said that authorities could regulate the movement of trains to prevent unlawful gatherings but could not bring the entire system to a halt, stressing that the right of Delhi's residents to access public facilities and move freely also required protection.*

*"Stopping something and regulating are two different concepts. One can regulate but it is completely different to put a halt on everything... you cannot stop everything," observed the bench.*

*"You will not use a hammer to kill a fly," remarked the court, explaining that the authorities must adopt measures commensurate with the situation rather than impose sweeping restrictions.*

*"Since the organisers are not before us, the limited issue before the court is whether the complete stoppage of metro and rails requires reconsideration. Upon our suggestion that there is a distinction between complete prohibition and regulation of metro and rails, learned solicitor general has fairly agreed to reconsider the prohibition and allow the movement of metro trains and other trains in such a regulated manner so that no inconvenience is caused to the citizenry of residents of Delhi, while keeping in mind the principle of proportionality," the court said in its order.*

*The order added: "In terms of the assurance, we direct that a considered decision shall be taken to allow movements of metro and other trains so that no inconvenience is caused to the people and wide publicity is also given. Similarly, revised advisories be published so that no hardship is caused to the public while commuting in the city."*

*The court passed the order after solicitor general Tushar Mehta, appearing for the Centre and Delhi Police, agreed to reconsider the restrictions in response to the bench's concerns over their proportionality. It directed that a considered decision be taken to allow metro and other trains to continue operating in a regulated manner so that commuters do not face inconvenience. Revised advisories must also be given wide publicity.*





ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தேசிய காசநோய் ஒழிப்பு விழிப்புணர்வு உறுதிமொழியினை ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் தலைமையில் (08.10.2026) அன்று அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.உடன் ஈரோடு மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார், துணை இயக்குநர் (காசநோய்) மரு. பி.ரமேஷ்பாபு, துணை இயக்குநர் (மை பாரத்) ரிம்யா உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற தேசிய காசநோய் ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சியில் காசநோய் இல்லா கிராம ஊராட்சிகளுக்கு பாராட்டு சான்றிதழ்களை ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் (08.10.2026) அன்று வழங்கினார். உடன் ஈரோடு மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார், துணை இயக்குநர் (காசநோய்) மரு.பி.ரமேஷ்பாபு, துணை இயக்குநர் (மை பாரத்) ரிம்யா அவர்கள் உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்ட நிர்வாகம் மற்றும் தொல்லியல்துறையின் சார்பில் பெருந்துறை வட்டம், கொடுமணல் அகழாய்வுத் தளத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி தலைமையில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்கள் நேற்று (09.10.2026) கல்விச்சுற்றுலா மேற்கொண்டனர்.



ஈரோடு மாவட்டம், சென்னிமலை புதுப்பாளையத்தில் விவசாய பயனாளி தனது தோட்டத்தில் அரசு மானியத்துடன் அமைக்கப்பட்ட நிரந்தர காய்கறி பந்தலை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (09.10.2026) நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

# கூடங்குளத்தில் பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் பிறந்த நாள் விழா இனிப்பு வழங்கி கொண்டாட்டம்

நெல்லை மாவட்டம் கூடங்குளத்தில் பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் அன்புமணி ராமதாஸ்வு- பிறந்த விழா பாமக திருநெல்வேலி தெற்கு மாவட்ட தொழிற்சங்க தலைவர் கூடங்குளம் து.சுரேஷ் தலைமையில் நடந்தது.

விழாவையொட்டி கேக் வெட்டி பட்டாசு வெடித்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடினர் இந்நிகழ்ச்சியில் பாமக ராதாபுரம் ஒன்றிய துணை செயலாளர் பிரகாஷ்.பாட்டாளி மக்கள் கட்சி திருநெல்வேலி தெற்கு மாவட்ட தலைவர் வின்ஸ்டன். தொழிற்சங்க துணை தலைவர் பாலுசாமி.

ராதாபுரம் ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் ராஜபாண்டி. ஒன்றிய அமைப்புச் செயலாளர் சுரேஷ் மற்றும் கட்சி நிர்வாகிகள் பாபு .முருகன். உள்ளிட்டோர் சிறப்பித்தனர்.



Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004, Editor FARUK ALI M.